


# Southern Builder

Bulletin of Builders' Association of India - Southern Centre

For Private Circulation only

Estd1941

JULY 2025





**13.07.2025 அன்று**

## தென்னக மய்யம் சார்பாக அம்பத்தூரில் விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டது

jayaraj
*Leaders in Teak*



T. RAJA SEKHAR
MANAGING DIRECTOR

# JAYARAJ-TIMBER

Teak Wood Logs | Teak Sizes | Teak Planks
Teak Frames | Doors & Windows



Our company has 30+ years of expertise in Teakwood, importing from around **10 countries** across the World. We operate from **Chennai offering excellent quality**, **pest-free Teakwood** at **competitive prices** to our customers. We supply **PAN India** to **Builders, Furniture Manufacturers, Saw millers, Traders, etc.**

PHONE
**9840070992 | 9791067555 | 7092212666**

ADDRESS
19, Puzhal Union Road, Vadaperumbakkam,
Chennai-600060

WEBSITE
www.jayarajtimber.com

EMAIL
enquiry@jayarajtimber.com












# Southern Builder

Bulletin of Builders' Association of India - Southern Centre

For Private Circulation only

Offical Journal of Builders' Association of India - Southern Centre. July 2025



**Builders' Association of India**
**Southern Centre**
Plot No. A1, 1st Main Road, Opp. to AIEMA, Industrial Estate, Ambattur, Chennai - 600 058.
(T) 044-2625 2006 | (E) baisouthern1950@gmail.com | (W) www.baisouthern.com



## OFFICE BEARERS - 2025-2026

MR. R NIMRODE - CHAIRMAN
MR. K GOPINATHAN - VICE CHAIRMAN
MR. G DIWAKAR - HON. SECRETARY
MR. A SATHYANARAYANA - HON. TREASURER
MR. J NIMAL CHAND - HON. JOINT SECRETARY
MR. N G LOKANATHAN - IMM. PAST CHAIRMAN

## EDITOR
MR. S AYYANATHAN
98410 46799

## EDITORIAL BOARD
MR. S D KANNAN
MR. S RAMAPRABHU
MR. P K P NARAYANAMURTHY

## ADVISORS
Bhisma R RADHAKRISHNAN
All India Past President & Trustee

MR. Mu MOAHAN
All India Past President & Trustee


## CONTENTS


ஆசிரியர் மடல் 04
மய்யத்தலைவர் மடல் 05
Special Materials in Construction 06
Tax Corner 09
காகிதம் செய்வோம் 16
கட்டுமான இடத்தில் ஏற்படும் பிரச்னைகளும் தீர்வுகளும் 20
Photo Page 22
Real Estate Update 28
New Patron Members 30
Schedule of Rates 2025-26 32
Southern Centre Activities 45


## TARIFF

| Si. No. | Description | Rate Per Issue | Rate Per Annum |
|---|---|---|---|
| 1. | Multi Colour A4 Size Back Cover | Rs.40,000/- | Rs.4,00,000/- |
| 2. | Multi Colour A4 Size Rear Cover Inner | Rs.30,000/- | Rs.3,00,000/- |
| 3. | Multi Colour A4 Size Front Cover Inner | Rs.30,000/- | Rs.3,00,000/- |
| 4. | Multi Colour A4 Size Inner Page | Rs.15,000/- | Rs.1,50,000/- |
| 5. | Multi Colour A4 Size Half Size Inner Page | Rs.10,000/- | Rs.1,00,000/- |
| 6. | Black & White A4 Inner Page | Rs.10,000/- | Rs.1,00,000/- |
| 7. | Black & White A4 Half Page Inner Page | Rs.6,000/- | Rs.60,000/- |

Extra 5% GST


Disclaimer

The Materials Provided in this Publication are a free Service to its readers. No copyright Violations are intended. Views expressed in this publication are not necessarily of BAI. No direct or indirect or consequential liabilities are acceptable on the information made available herein.

# ஆசிரியர் மடல்



**அன்புடையீர் வணக்கம்,**

இந்தியாவின் மிகச் சிறந்த விஞ்ஞானி, முன்னாள் குடியரசுத் தலைவர் மற்றும் இளைஞர்களின் உந்து சக்தியான டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல்கலாம் அவர்களின் நினைவு நாள், ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 27ஆம் தேதி நாடு முழுவதும் அனுசரிக்கப்படுகிறது. 2015 ஆம் ஆண்டு இந்த நாளில் அவர் இம்மண்ணில் இருந்து நீங்கினார். அந்த நாள் இந்தியாவிற்கு ஒரு இருண்ட நாளாக இருந்தாலும், அவரது கனவுகள் மற்றும் கருத்துக்கள் இன்று பலரின் வாழ்க்கையை ஒளிரச் செய்கின்றன.

அப்துல்கலாம் ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்தாலும், தனது கடின உழைப்பால் அறிவியல், விண்வெளி, பாதுகாப்பு தொழில்நுட்பம் உள்ளிட்ட பல துறைகளில் இந்தியவுக்கு பெருமை சேர்த்தவர். அப்துல்கலாம் இந்திய விண்வெளித்துறையின் மையமாக விளங்கியவர். அவர் ISRO மற்றும் DRDO போன்ற முக்கிய நிறுவனங்களில் பணியாற்றினார். குறிப்பாக SLV-III திட்டம் (இந்தியாவின் முதல் செயற்கைக் கோள் ஏவுகணை திட்டம்) இந்திரா, அக்ஷே, பிருத்வி, அக்னி, நாக் போன்ற பல்வேறு ஏவுகணைகள் உருவாக்கத்தில் முக்கிய பங்கு, போகரன் இரண்டாம் அணுப் பரிசோதனை (1998) இந்தியாவின் பாதுகாப்பை வலுப்படுத்திய முக்கிய நிகழ்வு. இந்த பங்களிப்புக்காகவே அவருக்கு "மிசைல் மேன் ஆஃப் இந்தியா" என்ற பட்டம் வழங்கப்பட்டது.

அப்துல்கலாம் தமிழ் மொழியின் மேல் அலாதி பற்று கொண்டவர். தமிழ் கவிதைகளை ரசித்தவர். திருக்குறளையும், பாரதியாரின் பாடல்களையும் மேற்கோள் காட்டியவர். அவரின் பேச்சுக்களில் தமிழ் கலாச்சாரத்தின் நயமும், அறிவியலின் ஆழமும் ஒன்றாகவே பிணைந்திருக்கும். அவர் தமிழ் மாணவர்களுக்கு அறிவியலை எளிமையாக எடுத்துச் சொல்லும் பாங்கும், பாசமும் அவரை தமிழர்களின் மனதில் நிரந்தரமாக்கியுள்ளது.

2002ம் ஆண்டு அப்துல் கலாம் இந்தியாவின் 11வது ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார். மக்களின் அன்பைப் பெற்றதால் அவருக்கு "பீப்பிள்ஸ் பிரெசிடெண்ட்" என்ற பட்டம் வழங்கப்பட்டது. அவரது பதவிக்காலம் 2002-2007), நேர்மையும், நேர்த்தியும் நிரம்பியது. அவரது நினைவுநாள் மாணவர்களுக்கு ஊக்கமும், வழிகாட்டுதலுமாக இருக்கிறது. கனவு காணுங்கள், கனவு செயலில் மாறட்டும் என்ற அவரது வார்த்தைகள், இன்றும் தமிழ்நாடு மற்றும் இந்தியாவிலுள்ள இளைஞர்களின் மனதைக் கிளரச் செய்கின்றன.

ராமேஸ்வரத்தில் அமைந்துள்ள அப்துல்கலாம் நினைவிடம், இன்று தமிழ்நாட்டின் முக்கியமான சுற்றுலா மற்றும் கல்வி முக்கியத்துவம் வாய்ந்த இடமாக மாறியுள்ளது. இங்கு வரும் மக்கள் அவரது சாதனைகளை பார்த்து வியக்கிறார்கள். புதிய கனவுகளை கண்டிடுகிறார்கள். அப்துல் கலாம் நினைவுநாள் என்பது வெறும் ஒரு நாள் நினைவு கூர்வதற்கானதல்ல. அது நம் ஒவ்வொரு நாளும் அவரைப் போல உயர்வதற்கான பயணத்தைத் தொடங்கும் விழிப்புணர்வு நாளாக இருக்க வேண்டும். கல்வியையும், ஒழுக்கத்தையும் கருவியாக கொண்டு நாம் ஒவ்வொருவரும் நமது சமூகத்தில் சிறு மாற்றங்களை உருவாக்க முடியும் என்பதே அவர் விட்டுச் சென்ற பெரும் பாடம். "உங்களின் கனவுகள் உயரமாக இருக்கட்டும் ; உங்கள் முயற்சிகள் இன்னும் உயரமாக இருக்கட்டும்.

அப்துல்கலாம் இளைஞர்கள் மற்றும் மாணவர்களை அதிகம் நேசித்து அவர்களை ஊக்குவித்து உயர்ந்த சிந்தனையாளர்களாக உருவாக்கி இந்தியாவை வல்லரசாக உருவாக்குவதற்கு பெருமுயற்சி எடுத்தார். அந்த வகையில் அவருடைய ஆத்மாவின் விண்ணுலகப் பயணம் மாணவர்களிடையே உரையாற்றும் போது நடந்தது குறிப்பிடத்தக்க நிகழ்வாகும். தமிழ்நாடு அரசு இவரது பிறந்த நாளான அக்டோபர் 15, "இளைஞர் மறுமலர்ச்சி" நாளாக அறிவித்தது

இந்த நாள், நம்மை ஒவ்வொரு நொடிக்கும் ஊக்கப்படுத்தும் அவரது வாழ்வின் ஒளிக்கதிரை மீண்டும் நினைவு கூரும் ஒரு அழகான வாய்ப்பு.

**நன்றி, வணக்கம்**
**என்றும் அன்புடன்**
**S. அய்யநாதன்**

## மய்யத்தலைவர் மடல்



**தென்னக மய்ய உறுப்பினர்களுக்கு வணக்கம் !**

அம்பத்தூர் அரசு ITI ல் பயின்று வரும் Draughtsman Civil மாணவிகளுக்கு தென்னக மய்யத்தின் முன்னாள் மய்யத்தலைவர் மற்றும் M/S. Rahul Associates நிறுவனத்தின் தலைவர் திரு. R.R. ஸ்ரீதர் அவர்களின் பணியிடமான திருவேங்கடம் நகர், அம்பத்தூர் பகுதியில் Industrial Visit ஏற்பாடு செய்யப்பட்டது. மாணவிகள் திட்டத்தின் அமைப்பு, கட்டுமான, பாதுகாப்பு நடைமுறைகள் Curing செயல்முறை மற்றும் தரக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் பற்றி பயிற்சி பெற்றனர். இது போலவே நமது உறுப்பினர்களின் பணியிடங்களில் ITI ல் பயிலும் மாணவ மாணவிகளுக்கு Industrial Visit ஏற்பாடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. உறுப்பினர்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டுகிறேன்.

நமது கட்டுநர் சமுதாயம் சந்தித்து வரும் இடர்பாடுகளைக் குறித்த நமது கோரிக்கைகள் அடங்கிய மனுவினை TNRERA தலைவர் திரு. சிவதாஸ் மீனா மற்றும் உறுப்பினர்களிடம் மாநிலத்தலைவர் அவர்கள் தலைமையில் நேரில் சமர்ப்பிக்கப்பட்டது. சாதகமான முடிவுகள் விரைவில் வரும் என எதிர்பார்க்கிறோம்.

Image Building க்காக தென்னக மய்யம் 13.07.2025 அன்று AIEMA -Fivering Sports Pvt Ltd அம்பத்தூர் சென்னை -58ல் விளையாட்டுப் போட்டியினை மிகச் சிறப்பாக நடத்தியது. இதில் Shuttle, Carom, Chess, Indoor Cricket, Archery போன்ற பிரிவுகளில் போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. பங்கேற்ற அனைவரும் மிகவும் உற்சாகமாக போட்டிகளில் கலந்து கொண்டு தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர். இன்னும் இது போன்ற நிகழ்ச்சிகளை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. அனைவரும் பங்கேற்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

இரண்டாவது மாநில அளவிலான மேலாண்மை மற்றும் பொதுக்குழு கூட்டம் 19.07.2025 அன்று திண்டுக்கல்லில் நடைபெற்றது. மய்ய நிர்வாகிகளோடு பொதுக்குழு மற்றும் மேலாண்மைக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

17 ஆண்டுகள் 1315 மீட்டர் நீளம் 359 மீட்டர் உயரம் கொண்ட உலகின் உயரமான ரயில் பாலத்தினை ஜம்மு காஷ்மீரின் ரியாசி மாவட்டத்தில் செனாப் நதியின் குறுக்கே கட்டி நமது இந்திய கட்டுமான வல்லுநர்கள் நாம் யாருக்கும் சளைத்தவர்கள் அல்ல என்பதை நிருபித்துள்ளனர். இந்தக் கட்டுமானப் பணியில் பெங்களூரில் உள்ள இந்திய அறிவியல் நிறுவனத்தின் சிவில் இன்ஜினியரிங் துறை பேராசிரியை மாதவி லதா மற்றும் அவரது குழுவினர்கள் முக்கிய பங்காற்றியுள்ளனர். ரிக்டர் அளவில் 8 என்ற அளவுக்கு பூகம்பத்தையும், 40 கிலோ வெடிகுண்டு தாக்குதல்களையும் 266 கி.மீட்டர் வேகத்தில் காற்று வீசினாலும் இவை அனைத்தையும் தாங்கக்கூடிய வகையில் வலுவான ரயில் பாலத்தினை கட்டியுள்ள அப்கான்ஸ் நிறுவனம் மற்றும் இதில் பங்கேற்ற அனைவரையும் மனமாற பாராட்டுவோம்.

தென்னக மய்யத்தின் பவள விழா ஆண்டினை கொண்டாடும் முகமாக பல்வேறு நிகழ்வுகளை நடத்த திட்டமிட்டு அதற்கான ஆயத்தப்பணிகளை மேற்கொண்டு வருகிறோம். உறுப்பினர்கள் அனைவரும் தங்களின் முழு ஒத்துழைப்பினை நல்கி பவள விழா கொண்டாட்டங்களை மிகச் சிறப்பாக நடைபெற செய்ய வேண்டுமாய் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

என்றும் அன்புடன்,

**R. நிம்ரோட்**
**மய்யத்தலைவர்**

# Special Materials in Construction

**A.R.Santhakumar**
**Former Emeritus Professor, Department of Civil Engineering IIT Madras**



In this chapter we will study two important materials used in construction. Normally, concrete is weak under tension. By distributing steel in a thin member, the element can be made flexible and ductile. The members are capable of carrying loads more due to their form than due to their strength. The forces developed are known as membrane forces. These membranes are termed ferro-cement. Section 27.1 describes the various aspects of this modern material.

One of the serious problems encountered in concreting is to make fresh concrete flow around reinforcements. Many problems arise because of poor compaction. Using a suitable technology fresh concrete can be made to flow without any external effort. Such a flowing concrete which compacts itself due to its own flowability is known as self-compacting concrete. Section 27.2 deals with details of self-compacting concrete.

**27.1 Ferro-cement**

In the early 1940s, Pier Luigi Nervi, a noted Italian engineer, revived the concept of ‘Ferro-cement’ and used it for building fishing boats. He pointed out that the distribution of reinforcing meshes in concrete produces a material with approximately homogeneous mechanical properties, capable of resisting high impacts. Following some preliminary tests on slabs, he showed that ferro-cement possesses exceptional elasticity, flexibility, strength, and resistance to cracking, and in the year 1943 the Italian Navy accepted ferro-cement as a vessel-building material. Ferro-cement gained wide acceptance in the 1960s for boat building in the United Kingdom, New Zealand, Canada, and Australia. In 1968, the Fisheries Department of the Food and Agricultural Organization (FAO) of the United Nations started ferro-cement boat-building projects in Asia, Africa, and Latin America and it later in other countries. Today ferro-cement is widely accepted and utilized.

The definition of ferro-cement was first published by ACI Committee 549 in the year 1980: ‘Ferrocement is a type of thin wall reinforced concrete commonly constructed of hydraulic cement mortar reinforced with closely spaced layers of continuous and relatively small size wire mesh. The mesh may be made of metallic or other suitable materials.’

Based on experience and advancement in ferro-cement, Antoine E. Naaman extended the definition proposed by ACI Committee 549. ‘Ferrocement is a type of thin wall reinforced concrete commonly constructed of hydraulic cement mortar reinforced with closely spaced layers of continuous and relatively small size wire mesh. The mesh may be made of metallic or other suitable materials. The fineness of the mortar matrix and its composite should be compatible with the mesh and armature systems it is meant to encapsulate. The matrix may contain discontinuous fibres’. The last two sentences were added to ascertain the compatibility of the matrix with the reinforcement in order to build a sound composite material and to accommodate the use of fibre or microfibres to improve performance in hybrid composites when desirable.

**27.1.1 Applications of Ferro-cement**

Marine applications Ferro-cement is used for constructing boats, fishing vessels, barrages, docks, floating buoys, and water or fuel tanks. The advantages of using ferro-cement in marine structures are water tightness, impact resistance, small thickness, and light weight.

Water supply and sanitation applications Water tanks, sedimentation tanks, well casings, septic tanks, sanitary tanks, and linings of swimming pools.

Agricultural applications Grain storage bins, silos, water tanks, pipes, linings for underground pits, and irrigation channels.

Housing applications Mosque domes, shelters, sheds, domed structures, precast housing elements, wall panels, sandwich panels, corrugated roofing sheets, hollow-core slabs, permanent formwork, water tanks, and repair and rehabilitation of existing houses.

Rural energy applications Biogas digesters, biogas holders, incinerators, and panels for solar energy collectors.

Permanent formwork For reinforced or prestressed concrete columns, beams, slabs, etc.

Other structures Bus shelters, sheds, pedestrians walkways, service core units for housing, slides for playgrounds, skateboard rings, and industrial shelters.

**27.1.2 Materials used in Ferro-cement**

Ferro-cement is basically considered as being made of a cement matrix and steel mesh reinforcement. Various materials are used for making ferro-cement. An overview of ferro-cement composition, the reinforcing materials and their parameters, and properties are given in Table 27.1.

Table 27.1 Parameters and properties of materials used in ferro-cement

| Parameter | Specification |
|---|---|
| Wire-mesh reinforcement | |
| Wire diameter | $0.5 \le d_w \le 1.5$ mm |
| Type of mesh | Square woven or welded galvanized wire mesh, chicken wire mesh or expanded metal mesh |
| Size of mesh openings | $6 \le D \le 25$ mm |

| | |
|---|---|
| Number of mesh layers | Up to 6 layers per cm of thickness |
| Volume fraction of reinforcement | |
| Specific surface of reinforcement | Up to 4 $cm^2/cm^3$ in both directions |
| Intermediate skeletal reinforcement | |
| Type | Wire, wire fabric, rods, strands |
| Diameter | $3 \leq db \leq 10$ mm |
| Grid size | |
| (skeletal reinforcement not always present) | $5 \leq G \leq 15$ cm |
| Typical mortar composition | |
| Portland cement | Any type depending on application |
| Sand-to-cement ratio | $1 \leq s/c \leq 2.5$ by weight |
| Water-to-cement ratio | $0.35 \leq w/c \leq 0.6$ by weight |
| Recommendations | • Fine sand all passing sieve size 1.5 mm and having 5% by weight passing sieve size 0.25 mm, with a continuous grading in between.<br>• Additives, air-entraining agents, corrosion inhibitors, water reducing agents or superplasticizers as needed. |

**Cement mortar mix**

A cement mix is designed using standard methods only. Its components are Portland cement, fine aggregate, water, and admixtures (if required). Material should satisfy all requisite standards similar to reinforced concrete. Additives such as superplasticizers, silica fumes, and fly ash can also be used.

**Skeletal steel**

To form the skeleton of the structures skeletal steel is often used in ferro-cement in the form of welded wires or a simple grid of steel wires, rods, or strands. Mesh layers are attached around this skeleton steel. The steel also acts as a spacer, leading to savings in the mesh layer. It helps in resisting tensile and punching shear. The properties of skeletal reinforcement are similar to those of reinforcement bars. Figure 27.1 shows skeletal steel details and Table 27.1 gives information about skeletal reinforcement.




**Steel mesh reinforcement**

Steel meshes are the primary reinforcement for ferro-cement. The meshes can be square woven or welded, or chicken wire meshes of hexagonal shape and sheet similar to those used in plaster and stucco applications. Figure 27.2 shows steel meshes used in ferro-cement and Fig. 27.3 shows their cross-sectional details. The properties of wire meshes and reinforcing bars are similar to each other. Moreover, the elastic modulus of steel wire is greater when compared to woven mesh. This is due to the weaving effect of wire, which under tension straightens up leading to a decrease in modulus. Apart from this, the modulus of the mesh changes with loading and unloading (see Fig. 27.4). In most steel meshes, whether woven or welded, the properties in the longitudinal and transverse directions are different. This is also applicable for hexagonal and expanded meshes.




**Fig. 27.2 Steel meshes used in ferro-cement**




**Fig. 27.3 Cross-sectional details of steel meshes**




**Fig. 27.4 Load–displacement curve**

**Fibre-reinforced polymeric meshes**

The poor durability and susceptibility to corrosion of steel reinforcement have forced engineers to think of new techniques. Fibre-reinforced polymer is the best alternative to steel meshes. Fibre-reinforced polymeric (FRP) meshes gained importance only in the mid 1980s. FRP reinforcements made from carbon, glass, aramid, or other high-performance materials embedded in polymeric matrices in the form of bars, tendons, and strands are as being produced and used.

**Advantages of FRP The following are the advantages of FRP.**

- Good resistance towards corrosion
- High strength
- Lower unit weight
- Easy to handle
- Good damping and fatigue behaviour
- Convenient to use for repairing structures

**Disadvantages of FRP The following are the disadvantages of FRP.**

- High cost
- Low shear strength
- Low ductility
- Susceptibility to stress rupture effect

### 27.1.3 Behaviour of Ferro-cement in Tension

The typical load elongation curve for reinforced concrete prism and ferro-cement prism is shown in Figs 27.5(a) and (b), respectively. The behaviour is mainly divided into three main stages. Stage I corresponds to the ascending linear elastic portion of the curve (OA). Stage II corresponds to the unstable portion (AB) where cracking starts and stabilizes. Stage III is where load elongation is almost linear elastic and the crack width increases with an increase in applied load because of cracking. This stage exists until the reinforcing steel yields. There will be only a few wide cracks across the steel.




**Fig. 27.5 (a) Behaviour of RCC, (b) behaviour of ferro-cement**

Upon comparing these two figures, it can be seen that the main difference lies in unstable stage II (AB). The behaviour of ferro-cement can be seen clearly: it slowly adapts to the increasing load by increasing its extensibility. Many fine cracks form. When cracks form, the increase in crack width is small compared to reinforced concrete. Crack width in ferro-cement can be one to two orders of magnitude smaller than that of reinforced concrete. However there are a number of fine cracks.

### 27.1.4 Advantages of Ferro-cement

The following are the advantages of ferro-cement.

- Favourable tensile property
- High ductility
- High resistance to cracking width and crack opening
- Ability to undergo large deflection
- Improved impact resistance and toughness
- Good fire resistance
- Good impermeability
- Low strength-to-weight ratio
- Low maintenance cost, owing to smaller width of cracks
- Environmental friendly

### 27.1.5 Difference between Ferro-cement and Reinforced Cement Concrete

**Physical properties**

The physical properties of ferro-cement and reinforced concrete member have been compared using a beam section in Fig. 27.6. Note the following in ferro-cement:

- reinforcement distribution is uniform throughout
- reinforcement is provided on both directions
- thinner section compared to RCC




**Fig. 27.6 Comparison of ferro-cement with RCC**

**To be continued in next issue....**

# TDS Rate Chart for FY 2025-26 (AY 2026-27)

திரு. S.D. கண்ணன்
Taxation Committee



## 1. Budget 2025: Key TDS Changes Effective from April 1, 2025

The Budget 2025 has revised threshold limits for TDS, ensuring that smaller transactions remain exempt from tax deduction, thereby reducing the compliance burden. These revised limits, effective from April 1, 2025, apply to various sections of the Income Tax Act, 1961.

| **Section** | **Before April 1, 2025** | **From April 1, 2025** |
|---|---|---|
| 193 – Interest on Securities | NIL | ₹10,000 |
| 194A – Interest other than interest on securities | (i) ₹50,000 for senior citizens (ii) ₹40,000 for others (banks, co-op societies, post offices) (iii) ₹5,000 in other cases | (i) ₹1,00,000 for senior citizens (ii) ₹50,000 for others (banks, co-op societies, post offices) (iii) ₹10,000 in other cases |
| 194 – Dividend for an individual shareholder | ₹5,000 | ₹10,000 |
| 194K – Income from mutual fund units | ₹5,000 | ₹10,000 |
| 194B – Lottery, crossword puzzle winnings | Aggregate exceeding ₹10,000 in a financial year | ₹10,000 per transaction |
| 194BB – Winnings from a horse race | Aggregate exceeding ₹10,000 in a financial year | ₹10,000 per transaction |
| 194D – Insurance commission | ₹15,000 | ₹20,000 |
| 194G – Commission, prize, etc. on lottery tickets | ₹15,000 | ₹20,000 |
| 194H – Commission or brokerage | ₹15,000 | ₹20,000 |
| 194-I – Rent | ₹2,40,000 per financial year | ₹50,000 per month |
| 194J – Professional/technical fees | ₹30,000 | ₹50,000 |
| 194LA – Enhanced compensation income | ₹2,50,000 | ₹5,00,000 |

For a detailed understanding of these TDS changes, please refer to our comprehensive article on TDS Rule Changes from April 2025!

## 2. Budget 2024: Rationalization of TDS Rates

Budget 2024 introduces reductions in the rate chart of TDS for specific payments to foster business operations and improve compliance among taxpayers. These changes of TDS tax rate chart are set to take effect on either October 1, 2024 or April 1, 2025. Below is a TDS tax rate chart table capturing the TDS slab rates detailing the affected payments, the corresponding changes in TDS rates and the *New TDS rates*,

| Section | Current Rate | New | Effective |
|---|---|---|---|
| Section 194H – Payment of commission or brokerage | 5% | 2% | October 1, |
| Section 194-IB – Payment of rent by certain individuals or HUF | 5% | 2% | October 1, 2024 |
| Section 194M – Payment of certain sums by certain individuals or Hindu undivided family | 5% | 2% | October 1, 2024 |
| Section 194-O – Payment of certain sums by e-commerce operator to e-commerce participant | 1% | 0.1% | October 1, 2024 |
| Section 194F – Payments on account of repurchase of units by Mutual Fund or Unit Trust of India | Proposed to be omitted | — | October 1, 2024 |

### 3. Current TDS Rate Chart for FY 2025-2026

The TDS rates for as applicable in the Financial Year 2025-2026 (Assessment Year 2026-2027) are highlighted in the TDS chart 2025 table below including TDS on salary slab, fund, etc. Below, we have given the comprehensive TDS section chart,

| Section | Nature of payment | Threshold limit (INR) | Rate of TDS |
|---|---|---|---|
| 192 | Salary | Taxable income liable to income tax | Any of the following rate as opted by the employee – · Normal slab rate; or · New tax regime slab rate. |
| 192A | Premature withdrawal from Employees' Provident Fund | INR 50,000 | 10% |
| 193 | Interest on securities | INR 10,000 | 10% |
| 194 | Dividend | INR 10,000 | 10% |
| 194A | Interest (other than interest on securities) | (i) ₹1,00,000 for senior citizens (ii) ₹50,000 for others (banks, co-op societies, post offices) (iii) ₹10,000 in other cases | 10% |
| 194B | Winning from lottery/ crossword puzzle | ₹10,000 per transaction | 30% |
| 194BA | Winning from online games | – | 30% |
| 194BB | Winning a horse race | ₹10,000 per transaction | 30% |
| 194C | Payments to contractors | Single transaction – INR 30,000; and Aggregate of transactions – INR 1,00,000 | In case of individuals/ HUF – 1% Any other case – 2% |

| | | | |
|---|---|---|---|
| 194D | Insurance commission | INR 20,000 | In the case of individuals – 5% In case of company – 10% |
| 194DA | Payment relating to life insurance policy | INR 1,00,000 | 5% |
| 194E | Payment to non resident sportsmen/ sports association | – | 20% |
| 194EE | Payments relating to deposits under NSS (National Savings Scheme) | INR 2,500 | 10% |
| 194F | Payment towards repurchase of the unit by Unit Trust of India/ Mutual Fund | – | 20% |
| 194G | Commission/ prize, etc. on sale of the lottery tickets | INR 20,000 | 5% |
| 194H | Commission/ Brokerage | INR 20,000 | 5% |
| 194-I | Rent | INR 50,000 per month | In the case of plant and machinery – 2% In the case of land/ building/ factory/ furniture/ fittings – 10% |
| 194-IA | Payment towards transfer of certain immovable property (other than agricultural land) | INR 50 Lakhs | 1% |
| 194-IB | Payment of rent by HUF/ individual (not liable to tax audit) | INR 50,000 per month | 5% |
| 194-IC | Payment under JDA (Joint Development Agreement) | NIL | 10% |
| 194J | FTS (Fees for Professional or Technical Services) | INR 50,000 | In the case of fees for technical services/ specified royalties – 2% In any other case – 10% |
| 194K | Income relating to specified units | INR 10,000 | 10% |
| 194LA | Payment towards compensation for acquisition of certain specified immovable property [land (other than agricultural land)/ building or part thereof] | INR 5,00,000 | 10% |
| 194LB | Income relating to interest from infrastructure debt fund | NIL | 5% |
| 194LBA | Income from the units of business trust | NIL | 10% |
| 194LBB | Income from units of investment funds | NIL | 10% |
| 194LBC | Income relating to investment in | NIL | In case the payee is individual/ |

| | | | |
|---|---|---|---|
| | securitization trust | | HUF – 25% In any other case – 30% |
| 194LC | Income relating to interest from Indian Company/ business trust | NIL | 5% |
| 194LD | Income relating to interest on certain specified bonds/ government securities | NIL | 5% |
| 194M | Payment of certain sums (i.e. commission/ brokerage/ fees for professional | INR 50 Lakhs | 5% |
| 194N | Payment of certain amounts in cash, i.e. cash withdrawals | INR 20 Lakhs in case the recipient has not furnished income tax return for three previous years (immediately preceding the previous year in which cash is withdrawn) INR 1 crore in any other case | In case amount/ aggregate amounts exceed INR 20 Lakhs – 2% In case amount/ aggregate amounts exceed INR 1 crore – 5% |
| 194-O | Payment of sum by an e-commerce operator to participant | INR 5 Lakhs | 1% |
| 194P | Tax deduction in case of senior citizen of 75 or more years age | Taxable income which is liable to tax | As per rates in force |
| 194Q | Payment towards purchase of goods | INR 50 Lakhs | 0.10% |
| 194R | Benefit/ perquisite in respect of business/ profession | INR 20,000 | 10% |
| 194S | Payment relating to transfer of virtual digital asset | Payment done by specified person – INR 50,000 Payment done by any other person – INR 10,000 | 1% |
| 195 | Payment of any other amount/ sum to a non-resident | | |
| | Income relating to investment done by a non-resident Indian Citizen | NIL | 20% |
| | Income relating to LTCG referred in section 115E of the Income Tax Act with regard to a non-resident Indian Citizen | NIL | 10% |
| | Income relating to LTCG referred in section 112(1)(iii) of the Income Tax Act | NIL | 10% |

| | | | |
|---|---|---|---|
| | Income relating to LTCG referred in section 112A of the Income Tax Act | NIL | 10% |
| | Income relating to STCG referred in section 111A of the Income Tax Act | NIL | 15% |
| | Any other income relating to LTCG | NIL | 20% |
| | Income relating to interest payable by the Government/ Indian concerns on money borrowed/ debt incurred in foreign currency | NIL | 20% |
| | Any other income | NIL | 30% |
| 206AA | TDS deduction in case Permanent Account Number (PAN) of deductee is not furnished to deductor | NIL | Higher of the following – 1. At rates specified in relevant section; 2. At rate/ rates in force; or 3. At 20%. |
| 206AB | TDS deduction in case of non-filers of income tax return | NIL | Higher of the following – 1. At twice the rates specified in relevant section; 2. At twice the rate/ rates in force; or 3. At 5%. |

This *TDS chart 2025* details the sections, nature of payment, threshold limit, and the corresponding TDS limit as per the TDS tax slab 2025.

## 4. Important amendments introduced on TDS rate chart vide the Finance Act, 2023

Below, we have provided the important amendment introduced on the TDS percentage chart as per Finance Act, 2023,

### 4.1. Section 193 – Interest on Securities –

With effect from 1st April 2023, provisions of section 193 of the Income Tax Act will be applicable to payments relating to interest on listed debentures to any resident. Notably, earlier the said payment was exempted from TDS.

### 4.2. Section 194B – Winning from lottery/ crossword puzzle –

1. Threshold TDS limit of INR 10,000 will be applicable aggregate amount from winning from lottery/ crossword puzzle/ card game or any other game/ gambling/ betting.

2. With effect from 1st April 2023, provisions of section 194B of the Income Tax Act will not apply to winning from any online game.

### 4.3. Section 194BA – Winning from online games (newly inserted provisions effective from 1st April 2023) –

Any person responsible for paying, income by way of winning from any online games, to any person is required to deduct TDS u/s 194BA. TDS is deductible on net winning in the user account at the end of the Financial Year. However, in case of withdrawal during the Financial Year from the user account, TDS will be deductible at the time of withdrawal.

### 4.4. Section 194 N – Payments of certain amounts in cash (i.e. cash withdrawals) –

The TDS limit, in case if the recipient is co-operative society, will be INR 3 Crores instead of INR 1 Crore.

## 5. FAQs

### 1. What is Tax Deducted at Source (TDS)?

Tax Deducted at Source (TDS) is a mechanism introduced by the Income Tax Department of India, where the payer deducts a certain percentage of tax before making specific payments like salary, rent, or interest. This deducted amount is then deposited with the government on behalf of the payee.

### 2. What are the significant changes in TDS rates as per the Budget 2024?

The Budget 2024 introduced reductions in TDS rates for specific payments to foster business operations and improve compliance among taxpayers. These changes are set to take effect on either October 1, 2024, or April 1, 2025. For instance, the TDS rate for payments under Section 194H (commission or brokerage) in the TDS percentage chart has been reduced from 5% to 2%, effective October 1, 2024.

### 3. How does the TDS on salary work for the Financial Year 2024-2025?

For the Financial Year 2024-2025, TDS on salary is deducted based on the tax slab rates applicable to the individual's taxable income. Employees can opt for either the normal slab rate or the new tax regime TDS slab rates, and the employer will deduct TDS accordingly as per the applicable TDS percentage chart.

### 4. What are the TDS rates for interest on securities and dividends?

As per the TDS section chart, TDS rates for FY 2024 25 for interest on securities under Section 193, if the interest amount exceeds INR 2,500, the TDS rate is 10%. For dividends under Section 194, if the dividend amount exceeds INR 5,000, the TDS rate is also 10%.

### 5. Are there any changes in TDS rates for FY 2024 25 for online gaming winnings?

Yes, with effect from April 1, 2023, Section 194BA was introduced, which mandates a 30% TDS on net winnings from online games. This TDS is deductible on the net winnings in the user account at the end of the financial year or at the time of withdrawal as mentioned in the TDS section chart during the financial year, whichever is earlier.

### 6. How has the TDS rate for rent payments changed?

Under Section 194-IB, applicable to rent payments by certain individuals or Hindu Undivided Families (HUF), the TDS rate has been reduced from 5% to 2%, effective October 1, 2024.

### 7. What is the TDS rates for FY 2024 25 for payments made by e-commerce operators to participants?

As per Section 194-O, the TDS slab rates on payments made by e-commerce operators to e-commerce participants has been reduced from 1% to 0.1%, effective October 1, 2024.

### 8. Are there any penalties for not furnishing a Permanent Account Number (PAN) to the deductor?

Yes, under Section 206AA, if the deductee fails to furnish their PAN to the deductor, TDS is deducted at the higher of the following rates:
The rate specified in the relevant section of the Income Tax Act.
The rate or rates in force. 20%.

### 9. What is the TDS rate for winnings from lotteries or crossword puzzles?

Under Section 194B, if the winnings from lotteries or crossword puzzles exceed INR 10,000, the TDS rate is 30%.

### 10. How does the new tax regime affect TDS deductions?

The new tax regime, introduced in the Union Budget 2020–21 and revised in subsequent budgets, offers reduced tax rates without exemptions and deductions. Taxpayers can choose between the old and new tax regimes, and TDS on salary will be deducted based on the regime opted by the employee.

### 11. What is the latest TDS rate chart for FY 2025?

The latest TDS rate chart for FY 2025 is a detailed document that outlines the tax deduction at source (TDS) rates for various types of income, applicable for the financial year 2025. It helps individuals and businesses ensure that they are deducting the correct amount of tax from payments made.

### 12. Why is the latest TDS rate chart for FY 2025 important?

The TDS rate chart for FY 2025 is crucial for understanding the revised tax rates on various payments like salaries, interest, and professional fees, helping individuals and businesses remain compliant with tax regulations.

### 13. Where can I find the TDS new rate chart 2025?

The TDS new rate chart 2025 is available on government tax portals and can be referred to for the most recent modifications in TDS rates for the year 2025 or else you can refer to the TDS section chart article by IndiaFilings.

### 14. How do I know if the TDS chart 2025 applies to me?

The TDS new rate chart 2025 applies to anyone receiving income on which TDS is applicable. You can compare it with your sources of income (such as salary, rent, or interest) to see if the new rates affect you.

# காகிதம் செய்வோம்

## (இறையன்பு, இ.ஆப. அவர்கள் எழுதிய என்ன பேசுவது! எப்படி பேசுவது! என்ற புத்தகத்திலிருந்து பெறப்பட்டது)

சீனர்கள்தான் முதலில் மையைக் கண்டுபிடித்தார்கள். இன்றிருக்கும் பேனாக்களுக்கு இணையான எழுதுகோல்களையும் கண்டுபிடித்தார்கள். பின்னர் காகிதத்தைக் கண்டுபிடித்தார்கள். மையும் பேனாவும் கிட்டத்தட்ட கி.மு. 1000ஆவது ஆண்டு வாக்கில் புழக்கத்திற்கு வந்தன சித்திர எழுத்துக்களையும் குறியீடுகளையும் வரைய விலங்குத் தோலும் மரமும் பயன்பட்டன.

**காகிதத்தை கண்டுபிடித்த வரலாறு சுவாரசியமானது :**

Michael Hart என்கிற அறிஞர் நூறு என்கிற புத்தகத்தை எழுதியிருக்கிறார். அதில். கி.பி.2000 வரைஉலகில் தாக்கத்தை ஏற்படுத்திய 100 மனிதர்களைப் பற்றிய வரலாற்றை அவர் பட்டியலிட்டு அவர்களைப் பற்றிய சிறு குறிப்புகளையும் வழங்கியிருக்கிறார். இந்த புத்தகத்தை மணவை முஸ்தபா தமிழில் மொழிபெயத்திருக்கிறார்.

மைக்கேல் உலகில் தாக்கத்தை ஏற்படுத்தியவர்களில் முதல் நபர் என்று முகமது நபியையும் இரண்டாவது நபர் என்று நியுட்டனையும், மூன்றாவதாக இயேசு கிறிஸ்துவையும், நான்காவதாக மனிதராகப் புத்தரையும், ஐந்தாவது நபராக கன்ஃபூசியசையும் ஆறாவதாக புனித பாலையும் (St Paul ) குறிப்பிடுகிறார்.

ஹார்ட் குறிப்பிடும் ஏழாவது நபர் சாய் லுன் சீனத்தை சார்ந்தவர். அவர்தான் காகிதத்தைக் கண்டுபிடித்தவர். மேற்கில் இருக்கிற பல கலைக்களஞ்சியங்களில் அவருடைய பெயர் இடம் பெறவே இல்லை என்று ஹார்ட் வருத்தப்படுகிறார்.

சாய்லுன் சீன அரசவையில் அலுவலகராகப் பணியாற்றியவர். கி.பி.105 ஆம் ஆண்டு வாக்கில் சீன மன்னருக்கு காதிகத்தின் மாதிரிகளை பரிசாத அளித்தார். சீனத்தைப் பொருத்தவரை காகிதத்தைக் கண்டுபிடித்தவர் அவர் என்பது பரவலாக அறியப்பட்ட தகவல்.

தகவல்களைப் பரப்புவதில் முக்கியப் பங்கை வகித்த காகிதத்தைக் கண்டுபிடித்தவரைப் பற்றிய தகவலையே மேற்கு அறியாமல் இருப்பது வருத்தத்திற்குரியது.

சீன ஆவணங்களைப் பார்த்தால் அவர் திருநங்கை என்று தெரிய வருகிறது. மன்னர் அவருடைய கண்டுபிடிப்பைப் பார்த்து மிகவும் மகிழ்ந்து உயர்ந்த பதவியில் நியமித்து செல்வங்களையெல்லாம் வாரி வழங்கினார். ஆனால் பின்னர் அரண்மனை சதி ஒன்றில் அவருடைய பெயர் அடிபட வீழ்ச்சியைச் சந்தித்த அவர் அவமானத்திற்கு உள்ளானார். நன்றாகக் குளித்து விட்டு அழகான உடைகளில் தன்னை அலங்கரித்துக்கொண்டு விஷத்தைக் குடித்து அவர் உயிரிழந்தார்.

சீனத்தில் கி.பி.2 ஆம் நூறறாண்டில் காகிதம் பரவலாக உபயோகத்திற்கு வந்தது. காகிதத்தை உற்பத்தி செய்யும் விதத்தை அவர்கள் ரகசியமாகவே வைத்திருந்தார்கள். எட்டாம் நூற்றாண்டில் அராபியர்களுக்கும் சீனர்களுக்கும் சச்சரவுகள் ஏற்பட்டன. அது தலாஸ் நதியில் கி.பி. 751 ஆம் அண்டில் போராக உருவெடுத்தது. அந்தப் போரில் அராபியர்கள் வெற்றி பெற்றார்கள் அதில் சிறைபிடிக்கப்பட்டவர்கள் காகிதம் தயாரிப்பாளர்களாக இருந்தார்கள். அவர்களிடமிருந்து காகிதம் தாயாரிக்கும் முறையை வலுக்கட்டாயமாக அராபியர்கள் பெற்றார்கள். பின்னர் காகிதம் தயாரிக்கும் முறை சாமர்க்கண்டுக்கும் பாக்தாத்துக்கும் பரவியது. பிறகு அது டமாஸ்கஸ், கெய்ரோ, மொராக்கோ என்று பரவி இறுதியில் ஸ்பெயினுக்கும் இத்தாலிக்கும் சென்றது. அங்கிருந்து ஒட்டுமொத்த ஐரோப்பாவிலும்

அதன் உபயோகம் தொடங்கியது.

ஒரு போரில்தான் காகிதமே பரவலாக்கப்பட்டது என்கிற கருத்தை மைக்கேல் ஒயிட் முன்வைக்கிறார். கல் படிமங்களிலும், மண் வரைப்பட்டிகைகளிலும், பாப்பிரசிலும், பார்ச்மெண்டடிலும் எழுதப்பட்டு வந்த எழுத்து காகிதம், மை, எழுதுகோல் போன்றவற்றின் உபயோகத்தின் காரணமாக எளிதில் எடுத்துச் செல்லத்தக்கதாக இருந்தது. இதனால் ராணுவத்தில் அதன் பயன்பாடு கூடியது.

ராணுவத்தில் முக்கியமான தகவல்களை ரகசியமாக அனுப்பவும், பெரிய படைகளை நிர்வகிக்கவும், திட்டங்களைத் தீட்டவும், ஆணைகள் செல்லும் தொடர் சங்கிலிகளை வடிவமைக்கவும் காகிதம் தோதாக இருந்தது. துப்பாக்கிகளும் வெடி மருந்துகளும் முக்கயிம் என்றாலும் உத்திகளும் திட்டங்களும் அவற்றைவிட முக்கியம் என்பதால் காகிதம் வாளைவிடச் சக்தி வாய்ந்தது என்று சொல்லப்பட்டது. ஆனால் ஆறாம் நூற்றாண்டு வாக்கில் எழுதுவதும் படிப்பதும் ஐரோப்பாவில் குறைந்தது. அதற்குக் காரணம் பாப்பிரஸ் போதிய அளவிற்கு விநியோகம் இல்லாமல் போனது. எனவே அலெக்ஸாண்டர் காலத்தில் இரண்டு லட்சம் சிப்பாய்களை நிர்வகித்த ராணுவம் அதற்குப் பிறகு வெறும் 20,000 சிப்பாய்களோடு திருப்திப்பட வேண்டியதாக இருந்தது. இந்தச் சூழலைக் காகிதக் கண்டுபிடிப்பு மாற்றியமைத்தது.

காகிதம் கண்டுபிடிக்கப்பட்ட பிறகும் பல ஆண்டுகள் அது அரிதானதாகவும் விலை உயந்ததாகவுமே இருந்தது. காரணம் கந்தல் துணிகளிலிருந்துதான் காதிகதத்தை அவர்கள் தயாரித்தார்கள் அக்காலக்கட்டத்தில் பெண்கள் கந்தல் துணிகளைச் சேகரித்து வைத்து கொள்வதற்காகவும் அவற்றைத் தங்களிடம் விற்பதற்காகவும் விளம்பரங்கள் கூட தோன்றின. இங்கிலாந்தில் 1666 ஆம் ஆண்டு இறந்தவர்களைப் புதைக்க பருத்தித் துணிகளைப் பயன்படுத்தக் கூடாது என்று தடையாணை பிறப்பிக்கப்பட்டது. அந்தத் துணிகள் காகிதத்திற்காக என்பதே ஏற்பாடு. ஒருவர் எகிப்திய மம்மிகளிடமிருந்து துணியை எடுத்து வரலாம் என்றெல்லாம் யோசனை தெரிவித்தார்.

பிரான்சு நாட்டு ஃபெர்சுவால்ட் டி ரியாமர் என்கிற விஞ்ஞானி புகழ்பெற்ற இயற்பியல் அறிஞராகவும் வேதியியல் விற்பன்னராகவும் கருதப்பட்டார். அவருக்குப் பூச்சிகளின் மீது பிரியம் அதிகம். ஒரு அவர் காட்டு வழியே நடந்து சென்றபோது காலியாக இருந்த குளவிக்கூட்டைப் பார்த்தார். ஆர்வத்துடன் அதை ஆராயந்தபோது அற் ¬தமான ஒரு தகவல் அவருக்குக் கிடைத்து. அந்த கூடு காகிதத்தாலானது. குளவிகள் தயாரித்த காகிதம் கந்தல் இல்லாமல் தயாரித்தது மரத்தையும் செடியின் நார்களையும் மென்று தயாரித்தது.

குளவிகள் செய்வதை ஏன் மனிதம் செய்ய முடியாது என்று அவருக்குத் தோன்றியது. பல ஆண்டுகளுக்குப் பின் மரக் கூழிலிருந்து காகிதத்தைத் தயாரிக்கும் முறை உருவானது. ஒரு காலத்தில் காகிதத்தைக் கசக்கி எறிந்தால் குற்றவாளியாகக் கருதும் நிலை கூட மேற்கில் இருந்தது.

**இனி எழுத்துக்களின் பரிமாண வளர்ச்சியைப் பற்றி பார்ப்போம்**

பொருளும் குறியீடும் ஒத்திருக்க வேண்டியதில்லை என்கிற புரிதல் ஏற்பட்ட பிறகு புதிய புதிய குறியீடுகள் உண்டாக ஆரம்பித்தன. எந்தக் குறியீ எந்தச் சொல்லக் குறிக்கின்றன என்பதை அதிக முயற்சி இல்லாமலும் குறைவான மனப்பாடத்துடனும் செய்கிற எழுதும் முறை உருவானது. அதற்கு ஒலி வடிவ எழுத்து என்கிற பெயர் ஏற்பட்டது. குறிப்பிட்ட குறியீடு குறிப்பிட்ட ஓசையை உண்டாக்கும்.

ஒலி வடிவ எழுத்து சிக்கனமான முறையாக பேச்சை வடிவமைக்கும் திறன் மிகுந்தது என்ற அறியப்பட்டது. எகிப்திய சித்திர முறையோ க்யூனிபார்ம் முறையோ முழுமையான ஒலி வடிவ

எழுத்தாக மாற்றமடையவில்லை. நவீன எழுத்துக்கெல்லாம் மூலமான எழுத்து முறை கிமு 2000 ஆண்டின் தொடக்கத்தில் எகிப்தில் தோன்றியது என்று சிலர் குறிப்பிடுகிறார்கள். ஐசக் ஆசிமோவ் உலகத்தில் முக்கிய எழுத்துக்கள் 3600 ஆண்டுகளுக்கு முன்னால் மத்திய கிழக்குப் பகுதியில் தோன்றியது என்றும் அதற்கு வடக்கு செமிடிக் எழுத்து என்று பெயர் என்றும் குறிப்பிடுகிறார்.

ஆனால் எக்ப்தில் எழுத்துக்கள் தோன்றிய பிறகு ஆயிரம் ஆண்டுகளுக்கு அவை அதிகம் பயன்படுத்தாமல் இருந்தன. போனீஸ்வரர்கள் அவற்றை மத்திய தரைக் கடல் பகுதிக் ¬ப் பரப்பினார்கள். அதை உள்ளூர் மொழிகள் தங்களுக்கு ஏற்றவாறு மாற்றிப் பயன்படுத்திக் கொண்டன. அவற்றில் ஒன்றே கிரேக்கம் என்பதை பிளாட்டோவின் எழுத்துகளிலிருந்து அறிந்து கொள்ள முடிகிறது.

எழுத்தின் கதை என்கிற நூலில் தமிழறிஞர் மு வரதராசனார் சித்திர எழுத்துக்கள், ஆப்பு வகை எழுத்துக்கள் , அரபி எழுத்துக்கள், சீன எழுத்துக்கள் என்று விரிவாக அலசுகிறார். சின்ன வயதில் குழந்தைகளுக்கு படத்தோடு சொற்களை அறிமுகப்படுத்துகிறோம். அவர்கள் எழுத்துக் கூட்டி படிக்கக் கற்றுக் கொள்கிறார்கள். எழுதத் தொடங்கும் போது அம்மாவின் படத்துக்குக் கீழ் அம்மா என்றும், அணில் என்கிற படத்திற்கு கீழ் அணில் என்றும், ஆட்டின் சித்திரத்தைப் போட்டு ஆடு என்றும் எழுதி காட்டுவது உண்டு. நாளடைவில் அந்த படத்தைப் பார்த்தாலே அதற்கான செல்லை ஊகித்துக் குழந்தைகள் எழுதக் கற்றுக் கொள்ளும்.

படக்கதைகளையும் அவ்வாறு அறிமுகப் படுத்துவது வழக்கம். பாட்டி வடை சுடுவதைப் போல ஒரு படமும் அந்த வடையைக் காகம் எடுப்பது போல் ஒரு படமும், வடை கீழே விழுதைப்போல் ஒரு படமும், வடை கீழே விழுவதைப்போல் ஒரு படமும் நரி வடையை எடுத்துக் கொண்டு ஓடுவதைப்போல் ஒரு படமும் இடம் பெறும். இதுவரை நரி வடை சாப்பிடுமா என்பது நமக்கும் தெரியவில்லை. ஆனால் அந்தப் படத்தைப் பார்த்துக் குழந்தைகள் ஏற்கனவே சொன்ன கதையை நினைவுடுத்திப் பார்ப்பார்கள். இதுதான் சித்திரங்களின் மூலம் எழுத்துக்கள் உருவானதன் பின்னணியும்கூட

ஐந்து பழங்களை குறித்த அந்த பழத்தை ஐந்து முறை சித்திரமாகத் தீட்டிருப்பார்கள். ஒன்றை யாரோ சாப்பிட்டுவிட்டார்கள் என்பதை குறிக்க நான்கு பழத்தை வரைந்திருப்பார்கள். இந்தச் சித்திரத்தின் மூலம் அனைத்தையும் உணர்த்த முடியாது என்றாலும் இது ஆரம்பமாக இருந்திருக்க வேண்டும். என்கிறார் மு.வ. மாட்டு வண்டியிலருந்து படிப்படியாக விமானம் அளவிற்குப் பயணம் பரிணாம வளர்ச்சி அடைந்ததைப்போலத்தான் எழுத்துக்களும் பரிணாம வளர்ச்சி அடைந்திருக்க வேண்டும் என்பது அவருடைய கணிப்பு. எழுத்துக்கள் எப்படி தோன்றியிருக்க வேண்டும் என்பதை முற்றிலுமாக வரலாற்றுச் சான்றுகளைக் கொண்டு மட்டும் அறிய முடியாது. இன்னும் பல இடங்களில் தோண்டப்பட வேண்டியவையும் தோண்ட முடியாதலையும் இருக்கின்றன. எனவே ஓரளவிற்கு ஊகிப்பதும் அவசியமாகிறது.

சித்திர எழுத்துக்கள் தோன்றிய காலத்தில் எகிப்தும் சினமும் நாகரிகமாக இருந்த நாடுகள். எகிப்து நாட்டில் எழுத்துக்களைப் படங்களாக எழுதும் பழக்கமே முதலில் இருந்தது. அந்தப் படங்களே பிற்காலத்தில் எழுத்துக்களாக அமைந்தன. ஐரோப்பாவில் உள்ள பல மொழிகள் அங்கிருந்து எழுத்துக்களைக் கற்றுக் கொண்டன.

எழுத்து வடிவத்தைக் கடன் வாங்குவது சகஜம். உதாரணமாக ஜப்பானிய சித்திர எழுத்துக்கள் சீனத்திலிருந்து கடன் வாங்கப்பட்டவை. சமஸ்கிருதத்தை எழுதப் பயன்பட்ட தேவநாகரி லிபி இந்தியை எழுதவும் உதவுகிறது.

எழுத்துக்களே இல்லாத பல மொழிகளும் இருக்கின்றன. உதாரணமாக துளு என்கிற

மொழிக்கோ குடகு என்கிற மொழிக்கோ கொங்கணிக்கோ எழுத்துக்கள் இல்லை. அவை வெறும் பேச்சு மொழிகளாகவே இருக்கின்றன.

எகிப்துநாட்டில் சித்திர எழுத்துக்களைக் கோயிலில் எழுதினார்கள். அரண்டனைக் சுவர்களில் எழுதினார்கள். அவாகள் கற்பாறைகளில் கூட எழுதி வைத்தனர். நம் நாட்டில் முக்கியமான சில நிகழ்வுகளை கல்வெட்டாகக் கோயில்களிலும் மண்டபங்களிலும் செதுக்கி வைத்ததைப்போல.

பாறைகளே இல்லாத மெசபடோமியா என்கிற நாட்டில் கட்டிடங்களைக் கருங்கல்லால் கட்ட முடியவில்லை. அதனால் சூளை போட்டு செங்கற்களை உருவாக்கி பெரும் கட்டிடங்களைக் கட்டினார்கள்.அங்கு களிமண் அதிகம். அதனால் களிமண்ணையே எழுதுவதற்குப் பயன்படுத்தினார்கள். அவர்களைப் பார்த்து யாரும் உங்களிடம் இருப்பது மூளையா களி மண்ணா என்று கேட்டிருக்க முடியாது.

களிமண்ணில் எழுதிய விதத்தையும் நாம் மனத்யாரிப்பு செய்து பார்க்கலாம். தண்ணீர் விட்டுக் குழைத்துத் தட்டியாக்கி பிறகு கருவகிளைக் கொண்டு ஈரக் களிமண்ணில் எழுதினார்கள். அதை எழுத்து என்று வைத்துக் கொண்டார்கள். ஈரக்களிமண்ணில் சிறு குச்சி முனையை சாய்த்து அழுத்தினால் எழுத்துக்கள் உருவாகும்.இவையே ஆப்பு வடிவ எழுத்துக்கள் என்று அழைக்கப்படுகிறது.

சித்திர எழுத்துக்களைப்போல அமைக்க முடியாத காரணத்தால் குறுக்கும் நெடுக்குமாகக் கோடுகள் அமைந்தன. இந்த எழுத்துக்கள் நாளடைவில் அடையாள எழுத்துக்களாக ஆகிவிட்டன. நினைவெ என்ற நகரத்தில் ஆப்பு வடிவ எழுத்துக்களால் ஆன புத்தகங்கள் இருந்தன என்று கூறுகிறார்கள். களிமண் தட்டுகளை அடுக்கி ஆள் உயரம் வைத்தால் ஒரு சின்ன புத்தகம் கிடைக்கும். இப்படி ஆயிரக்கணக்கான புத்தகங்கள் அந்த ஊரில் இருந்தனவாம்.

சித்திர எழுத்துக்களுக்கும் ஆப்பு வடிவ எழுத்துக்களுக்கும் அடிப்படையில் ஒரு வேறுபாடு உண்டு. சித்திர வடிவ எழுத்தில் காக்கையின் படமே எழுத்து. ஆப்பு வடிவத்தில் காக்கையைப் போல எழுத முயற்சி செய்து மூன்று நான்கு கோடுகள் மட்டுமே எழுத முடிந்தது. பின்னர் அந்த எழுத்தே காக்கை என்று அடையாளம் காணப்பட்டது. பிறகு நான்கைந்து எழுத்துக்கள் சொல்லை உணர்த்தும் அறிகுறியாக மாறிவிட்டன.

சித்திர எழுத்துக்களையே தொடர்ந்து எழுதும்போத அது சித்திரமாக இல்லாமல் ஒலிக்கு அடையாள எழுத்தாக மாறிவிடும். இதுபோன்ற மாற்றம் 3500 ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்டது. அப்போது செமிடிக் இனத்தைச் சேர்ந்த மக்கள் எகிப்து மக்களோட கலந்து பழக நேரிட்டது. செமிடிக் மக்கள் எகிப்து மக்கள் எழுதி வந்த அடையாள எழுத்துக்களை கற்றுக் கொண்டனர். பின்னர் அவற்றில் அபிவிருத்தி செய்தார்கள். அந்த அடையாள எழுத்துக்களில் 24 எழுத்துக்களை செமிடிக் இனத்து மக்கள் பயன்படுத்தினார்கள். சினாய் கல்வெட்டுக்கள் என்பவற்றில் இந்த எழுத்துக்கள் காணப்படுகின்றனவார். இதைத்தான் எழுத்துக்களின் மூலம் என்று ஐசக் ஆசிமோவ் குறிப்பிடுகிறார்.

